

KAAVYA TAMIL ISSN 2277 - 9221
மலர் - 4 இதழ் - 4
விலை ₹ 100

# காவ்யா தமிழ்



16 ஐப்பசி
அக்டோபர்-டிசம்பர் 2015


கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்



## கலாமுக்குக் காவியாஞ்சலி




இரா.கோபி நாடகம்



பொன்னீலன் பேட்டி



ஞானியம்



அப்துல் ரகுமான் - 75





தனி ஒருவன் - விமர்சனம்

Scanned with CamScanner

# அஞ்சலி

# அப்துல்கலாம்



ஒரு சரித்திரப் புதையலாய்
ராமேஸ்வரம் கடல்முத்தை
அதன் கரையினிலே புதைத்தோம்.

அலைவாய் அரற்றலையும்
நுரைப்பூ படையலையும்
மிஞ்சியது மக்களின்
கண்ணீரும் கால்சுவடும்.

இனமில்லை மதமில்லை
எவருக்கும் சொந்தமில்லை
கட்சியில்லை மொழியில்லை
கட்டியழ மனைவியில்லை
இருந்தாலும்
புல்லழுக பூவழுக
பொழுதுதித்த நிலா அழுக
குமரிமுதல் இமயம்வரை
கல்லும் கரைந்தழுக
கண்கண்ட சாமியானாய்
கரைகண்ட ஞானியானாய்.

அக்னி சிறகுகளால்
அகிலத்தை அளந்தவனே
விண் வெளியில் ஆய்வதற்கே
விண்கலமாய்ச் சென்றாயோ.

ஊழலை ஒழிக்க விரும்பிய
உண்மைக் குடியரசு நீ
ஊக்கம் விதைக்க வந்த
உயர்ந்த முடியரசு நீ

இந்தியா இருபது வரும்
அப்போது நீ வருவாயா?

விருதுகள் துரத்திய போதும்
வீழாமல் இருந்தவன் நீ
பதவிகள் தூக்கிய போதும்
பணிவாய் உயர்ந்தவன் நீ,
கனாகாணச் சொல்லிவிட்டு
தூக்கத்தைப் பறித்துக்கொண்டாயே!

அகராதிகளைத் திருத்துவோம்
அப்துல் என்றால் அறிவியல்
கலாம் என்றால் அடக்கம்.

சுந்தரபாண்டியன்



Scanned with CamScanner

# காவ்யா தமிழ் - 16

அக்டோபர் - டிசம்பர் - 2015

அப்துல்கலாம் · அஞ்சலி/01
திண்ணை:பாகுபலியும் பாபநாசங்களும்/02
க. ஆனந்தி · அப்துல்கலாமும் ஆசிரிய வழிகாட்டிகளும் /04
நாடகத் தமிழ்:சிகப்புக் கண்ணாடி - ஞா. கோபி/06
சிறுகதை: எறும்பு · ம. அரங்கநாதன்/16
மோஹன்லால்ஜி மஹதோ - வியோகி (இந்தி) சரஸ்வதி(த)/18
வெ. இரா. நளினி · கடவுளும் மனிதனும் /21
நெடுங்கதை: ஜ.பிரேமலதா · கரைக்கால்பேய் /23
கட்டுரை: அமரன் · இனிதினிது ஹைக்கூ/36
மதிப்புரை: கண்ணன் · சுந்தரபாண்டியனின் அந்தி/38
மறுப்புரை: பேரா.பி.பா. · திராவிடக் கருத்தியல்/40
சிறுகதை: மி.ராஜு ·கிஸ்தவமும் வன்முறையும்/43
ஏற்புரை: மா. அரங்கநாதன்/45
கட்டுரை: நீல. பாண்டியன் · சிவவழிபாட்டின் மறுபக்கம்/47
கி.சங்கரநாராயணன் · தமிழ்க் காப்பு இயத்தின் வினைக் கோட்பாடு/53
பேரா. ஏ.ஆதித்தன் · குறுந்தொகை மொழிபெயர்ப்பு/58
நேர்காணல்: பேரா.சு.சண்முகசுந்தரம் · அப்துல்ரகுமான் எனும் /65
பொன்னீலன் · முத்தாலங்குறிச்சி காமராசு/68
ஞானியம் · ஞானி /73
ஆய்வுகள்: இரா.இராம்குமார் · நெடுநல்வாடையில் நற்கலைகள்/76
மா. விஜயலெட்சுமி · பாவேந்தரின் இரட்டைக்காப்பியத்தில் /79
வீ.அன்னபூரணி · தொல்காப்பியம் சுட்டும் எண்ணான்கு உத்திகள் /81
மு.செல்லமணி · புறநானூற்றில் வெட்சித்திணைப் பாடல்கள் /85
முனைவர் க.காந்திதாஸ் · சங்க இலக்கியத்தில் கலைஞர்கள் /89
இரா. செல்வராணி · கானவப் பெண்களின் ஆடை அணிகலன்கள்/94
சி.விஜயலெட்சுமி · சங்க இலக்கியத்தில் ஔவையாரின் பாடல்கள் /97
இரா. ஜெயஸ்ரீ · வைரமுத்து கவிதைகளில் பெண்ணிய உளவியல் /102
முனைவர் கா.மீரா · இலக்கியத்தின் வழி உணவின் மருந்துலகம் /104
வி. ஹரிவிஜயதீபா · கலித்தொகை, பரிபாடலில் உணவுப் பொருள் /107
சி. வனஜா · பெண் உடலும் ஒடுக்கப்படுதலும் /112
சூ. மெட்டில்டாடெய்சி · சோ.தர்மன் சிறுகதைகளில் தொழிலாளர்கள் /117
வீ. சித்ரா · வானூர் வட்டார நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு /120
முனைவர் த. தியாகராஜன் · சிலம்பில் அறம் /124
ஏ. மேனகா · உயிரினும் சிறந்த ஒண்பொருள் /126
தெ. இந்துமதி · நக்கண்ணையாரும் அக இலக்கியப் பாடல்களும் /129
முனைவர் கி.அய்யப்பன் · நிகண்டுகளில் திருநர் /132
இரா. மங்கையர்க்கரசி · பெண் எழுத்துக்களில் புதிய சிந்தனை /136
ச. ஆரோக்கியராஜ் · ஆற்றுப்படையில் இரவலரும் புரவலரும் /139
அ. ரேவதி · சம்ஸ்கிருத காவ்யங்கள் ஒரு பார்வை /143
மு. சுதா · மேலாண்மை பொன்னுசாமியின் சிறுகதைகள் /146
S. சிவகங்கை · பெரம்பலூர் நகர் கோபாலசுவாமி திருக்கோயில் /148
தி. சீதாராமன் · இராஜம் ஐயரின் வாழ்வும் படைப்பும் /152
திரைத்தமிழ்: த.நா.சந்திரசேகரன் மற்றும் மு. முரளி · தனி ஒருவன் /155

ஆசிரியர் பேரா. சு.சண்முகசுந்தரம்
நிர்வாக ஆசிரியர் திருமதி முத்துலட்சுமி

ஆசிரியர் குழு

ஆ. ஏகாம்பரம், சென்னைப் பல்கலைக்கழகம்
அ.கோவிந்தராஜன், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி
திருநாகலிங்கம், புதுவைப் பல்கலைக்கழகம், சிலம்பு செல்வராசு,
கா. அய்யப்பன், செம்மொழி மத்தியத் தமிழாய்வு நிறுவனம்
தியாகராஜன், நெல்லையப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
தி. பெரியசாமி , பெரியார் பல்கலைக்கழகம், சேலம்
ரா. செயராமன், திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்
ஜெயகிருஷ்ணன், விஜயலட்சுமி, கேரளப் பல்கலைக்கழகம்
ஒ. முத்தையா, கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்
சத்தியமூர்த்தி, செ.ரவிசங்கர், காமராசர் பல்கலைக்கழகம், மதுரை
தே. ஞானசேகரன், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை
அழகேசன், மனோன்மணியம் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
நா. சந்திரசேகரன், அறவேந்தன், தில்லிப் பல்கலைக்கழகம்
ஈஸ்வரன் தேசியக் கல்லூரி, தேவி, உருமுதனலட்சுமி கல்லூரி
ப. கமலக்கண்ணன், சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி, ஈரோடு
திருச்செந்தூர் கதிரேசன், ஆதித்தனார் கல்லூரி
சிவ. விவேகானந்தன், வெங்கடேஸ்வரா கல்லூரி, தில்லி
தென்காசி ராஜாமுகமது, பெரியகுளம் நீலபாண்டியன்
ராஜபாளையம் நரேந்திரகுமார், சிவகாசி திலகபாமா,
மார்த்தாண்டம் மகேஷ்குமார், முத்தாலங்குறிச்சி காமராசு,
கு.கணேசன், சேலம்
பெங்களூர் சீனிவாசன், கிருஷ்ணசாமி
சிங்கப்பூர் ஜெயந்திசங்கர், சீதாலட்சுமி
இலங்கை நதிரா, குவைத் சக்கரவர்த்தி

இதழ்ப் பொறுப்பு : ம. பிரகாஷ்
இதழாக்கம் : கே.எல். லட்சுமி

16. இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம்
கோடம்பாக்கம், சென்னை - 6000 024.
போன் : 044 - 23726882, 9840480232
Email : kaavyabooks@gmail.com.
Website : www.kaavyaa.com.

**சந்தா விவரம்:**

தனி இதழ் ரூ.100/- ஆண்டு சந்தா ரூ.400/-
மூன்றாண்டு சந்தா ரூ.1000/-
(சலுகை - 25% கழிவில் நூல்கள்)
ஆயுள் சந்தா ரூ.5000/-
(சலுகை - 30% கழிவில் நூல்கள்)

**விளம்பரம் விபரம்:**
முன் / பின் உள் அட்டைகள் ரூ.10000/-
பின் அட்டை ரூ.15,000/- முழுப்பக்கம் ரூ. 3000/-
உள்ளே வண்ணப் பக்கம் ரூ.5000/-


தொகையை KAAVYA பெயரில் காசோலையாகவோ வரைவோலையாகவோ அல்லது பணவிடை (M.O) மூலமோ அனுப்பலாம். KAAVYA பெயரில் BANK OF INDIA, KODAMBAKKAM, CHENNAI - 24 கிளையில் 801420100003923 என்ற A/C எண்ணில் செலுத்தலாம். (IFSC: BKID 0008014).



Scanned with CamScanner



# வைரமுத்து கவிதைகளில் பெண்ணிய உளவியல்



**இரா.ஜெயஸ்ரீ**

மனிதர்களின் நடத்தையை ஆராயும் அறிவியல் துறை உளவியல் ஆகும். இத்துறை இன்று மிக விரிந்து பெருகிப் பல பிரிவுகளாகப் பரவியுள்ளது. மனித மனம் பற்றிய பல ஆய்வுகளில் உளவியல் கோட்பாடுகள் பல அடிப்படைகளாக அமைகின்றன.

தனிமனிதர்களின் தொகுதியாக இயங்குவது சமூகம். மனித சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றுபவையே இலக்கியங்கள். படைப்பாளனது உணர்வுகள் பெருகிட உருவாகும் கவிதைகள் யாவும் உளவியற்கூறுகளை வெளிக்காட்டி நிற்கின்றன.

அவ்வகையில் கவிஞர் வைரமுத்து அவர்களின் கவிதைகளில் பெண்ணிய உளவியல் கூறுகள் அமைந்திருப்பதை இக்கட்டுரை இனம் காண முற்படுகிறது.

எளிய தமிழால் தன் கருத்தை, கவிதைகளாக வடித்துத் தந்தவர் வைரமுத்து. திரைப்பாடல்கள், நாவல், இலக்கியம், மரபுக்கவிதை என எல்லாத்துறைகளிலும் இலக்கிய வரலாற்றுத் தடம் பதித்த தனிச்சிறப்பிற்குரியவர் அவர். ஆளுமைத்திறன் மிக்க அக்கவிஞர் தம் கவிதைகளில் பெண்மையை ஏற்றியும், போற்றியும் எழுதியுள்ளார். 'கருவாச்சி காவியம்' ஒன்றே அதற்குச் சான்று. பெண்ணின் வலிகளை, எண்ணங்களை, இயல்புகளை உள்ளது உள்ளவாறே எடுத்துக்காட்டும் வலிமை அவர் கவிதைகளுக்குண்டு.

"ஆணாதிக்க மரபிலிருந்து பெண் என்ற கருத்துரு மெல்ல மெல்ல விலகி வருகிறது. மாறிவரும் யுக சந்தியின் மையத்தில் நிற்கிறாள் பெண். இதுவரை பெண் என்ற தத்துவத்தைப் பெரும்பாலும் வடிவமைத்தது அவள் உடல்தான். பெண் தன் உடலைப் பின்னிழுத்துக் கொண்டு, தன் உள்ளத்தை மட்டுமே முன்னிறுத்தத் தலைப்பட்டு விட்டால், இருநூறு, முந்நூறு ஆண்டுகளில் இயந்கைக்குப் புறம்பான சில கலாச்சார அதிர்ச்சிகளைச் சந்திக்கக் கூடும் சமூகம்" என்று 'கருவாச்சி காவியம்' என்ற நாவலில் கூறுகிறார் வைரமுத்து.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ்க்கவிதை வெளியில் பெண்ணும், பெண் சார்ந்த கருத்துகளும் பரவலாக இடம்பெற்று வந்திருக்கின்றன. ஆண்டாளும், காரைக்காலம்மையாரும் 'பெண்மொழி இலக்கியவாதிகளாகத்' தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ளனர். சங்க இலக்கியப் பாடல்களிலும் பெண் குரல் ஒலிக்காமல் இல்லை.

"ஆணுக்குச் சரிசமமாய்" பெண்கள் எல்லாத் துறைகளிலும் ஏற்றம் பெற்று விளங்கும் இந்நூற்றாண்டில் பெண் கவிதை மொழி எவ்வாறுள்ளது? என்னும் கேள்விக்கு விடையைத் தருகிறார் வைரமுத்து.

காதலி, மனைவி, தாய், முதிர்கன்னி, அலுவல் மகளிர் எனப் பெண்ணின் பல்வேறு பரிமாணங்களும், பூப்பு எய்துதல், காதல் தோல்வி, தாய்மை, தோழமை, பிள்ளைவரம், பெண்ணழகு போன்ற பெண் உணர்வுகளும், பெண்மையை எதிர்நோக்கும் சவால்களும் அவரது கவிதையிலே வெளிப்பட்டிருக்கிறது.

## காதலி

ஓர் ஈழப்போராளிக்கு காதலியின் கடிதம் என்று 'துப்பாக்கி எப்போது பூப்பூப்பது?' என்ற தலைப்பில் கவிதை எழுதியுள்ளார் வைரமுத்து.

தன்னுடைய காதலன் ஈழத்தின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருப்பவன். தன்னைவிடத் துப்பாக்கியை நேசிப்பவன். வெடிகுண்டுகளின் விதைப் பண்ணையாகிவிட்ட சாலைகளை நினைத்து வருந்தும் காதலி.

**"உனக்கு**
**என் நினைவுகள் வந்ததுண்டா**
**எப்போதாவது?"**

தமிழ்த்துறைப் பேராசிரியர், பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

என்று சந்தேகமாக வினவுகிறாள். போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவனுக்குத் தன்னை நினைக்க ஏது நேரம்? ஏன்று எண்ணியவளாய் "இருக்காது" என்று அவளே பதில் சொல்கிறாள்.

**"என் தலையணையருகே**
**சில**
**உலகக் காவியங்களும்**
**உன் நினைவுகளும் தவிர**
**ஒன்றுமில்லை"**

என்று அவனைப் பற்றி நினைவே தன்னை இன்னும் உயிர்ப்போடு வைத்திருப்பதைச் சுட்டிக் காட்டுகிறாள்.

## நினைவு:

நினைவு என்பது நான்கு பகுதிகளைக் கொண்டது என உளவியல் அறிஞர் குறிப்பிடுவர். நாம் கற்றவைகளையோ அனுபவித்து உணர்ந்தவைகளையோ தான் நம்மால் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். ஆகையால், 'அனுபவம்' அல்லது 'கற்றல்' நினைவின் முதற்பகுதியாக அமைகிறது. நமக்கு அவை மீண்டும் தேவைப்படும் வரை கற்ற அல்லது அனுபவித்து உணர்ந்தவை மனத்தில் இருத்தி வைக்கப்படும். இவ்வாறு அமையும் நினைவின் பகுதியை மனத்திருத்தல் (Retention) எனலாம். இப்படி மனத்தில் இருப்பனவற்றை நாம் நினைவூட்டிக் கொள்கிறோம். இந்நினைவூட்டுதல் மீட்டுக்கொணர்தல் (Recall) அல்லது மீட்டு அறிதல் (Recognition) என இருவகையாக அமைகிறது என்பர் உளவியல் அறிஞர் (எஸ்.சந்தானம். கல்வி உளவியல், ப.282)

நினைவின் பகுதிகளில் ஒன்றாகிய மனத்திருத்தல் (Retention) என்பது தலைவியின் தனிமையில் அவள் நினைவில் நிழலாடும் பழைய எண்ணங்கள் வாயிலாக உணர்த்தப்படுகிறது.

தலைவனோடு இணைந்து வாழ மனம் எண்ணியெண்ணி ஏங்கினாலும் தமது மக்களின் விடுதலையே முக்கியம் என அவள் மனம் நினைக்கிறது. அதனால்தான் திருமணம் செய்துகொள்ளாமல் பிள்ளை பெற்றுக்கொள்ளப் பிரியப்படுகிறாள்.

**ஏனென்றாள்**
**ஈழ யுத்தத்திற்கு**
**இன்னுமோர் போராளி தேவை**

என்கிறாள்.

## சாவு விழைவு:

விடுதலை விரும்பும் அவள்,

**"அடிமை ஈழத்தில்**
**தம்பதிகளாய் இருப்பதினும்**
**சுதந்திர ஈழத்தில்**
**கல்லறைகளாய் இருப்போம்."**

என்று உணர்ச்சி மேலிடக் கூறுகிறாள்.

ஆக்க உணர்ச்சிகளும், அழிப்பு உணர்ச்சிகளும் ஒவ்வொரு மனிதரிடத்தேயும் உண்டு. நோயாளிகளுக்கு உளமருத்துவம் (Psychotherapy) செய்யும்போது தம்மீது வெறுப்பையும், கோபத்தையும் காட்டுவதை ஃப்ராய்டு கவனித்தார். சாவுணர்ச்சி மனிதரின் உள்ளத்தில் இருப்பதைக் கண்டறிந்தார். சாவு விழைவு (Death wish) என்பது இதன் உந்தலாகிறது.

உள்ளுணர்ச்சிகள் ஒன்றை ஒன்று ஆளுமை செய்யும் திறம் வாய்ந்ததாகும். இக்காதலியின் பாலுணர்ச்சி, அவனோடு தான் இணைந்து வாழ வேண்டுமென்பதை விரும்பினாலும், சாவுணர்ச்சி, தன்னுடைய இனம் விடுதலை பெற, தம் மக்கள் சுதந்திரமாய் வாழ வேண்டி ஆளுமை செய்கிறது. எனவே அடிமைப்பட்டு வாழ்வதைவிட சுதந்திரமாய்ச் சாவது மேல் என்ற சாவுணர்ச்சி உந்தப்பட்டு கல்லறையாய் வாழ அவள் துணிந்துவிட்டதை இக்கவிதை உளவியல் நோக்கில் உணர்த்துகிறது.

சூழல் எதுவோ அதற்கேற்ற உணர்ச்சிகள் தலைமையிடம் பெறுகின்றன. இருவகைப்பட்ட உணர்ச்சிகளின் கலவையாய் தலைவி விளங்குவதைக் கவிதை எடுத்துக்காட்டுகிறது.

மனம் ஒன்றைப் பிடித்துக்கொண்டு விட்டால் பிறகு அதிலிருந்து மீள்வது கடினம். இதை 'பீடிப்பு' என்பர் உளவியலார். இக்கவிதைத் தலைவி நாட்டுப்பற்று கொண்டவள். தன் நாடு, இனம், மதம், மொழி போன்றவற்றில் நேசம் காட்டுவதை 'குழு பீடிப்பு' என்கிறது உளவியல்.

பீடிப்புச் செயல்களில் சாவுணர்ச்சியின் கலப்பு மிக அதிகமாக இருக்கும் என்றும், அடிமைப் பழக்கங்களில் சாவுணர்ச்சி முதன்மை வகிக்கிறது என்றும் கூறும் உளவியல் கோட்பாடுகளை உறுதி செய்வதாக இக்கவிதை படைக்கப்பட்டுள்ளது.

•



Scanned with CamScanner



# இலக்கியத்தின் வழி உணவின் இன்றியமையாமையும் இன்றைய மருந்துலகமும்

முனைவர் கா.மீரா

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பது ஔவையின் பொன்மொழி. இத்தகு மானுடப் பிறவிக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் நோயின்றி வாழவேண்டும். மனிதன் நோயின்றி வாழவும், பெருவாழ்வு வாழவும் அடிப்படைத் தேவை உணவே. மக்கள் தொழில் புரிவதற்கு வேண்டிய சக்தியைப் பெறவும், உடலை நிலைபெறச் செய்யவும், உடலை பேணி வளர்க்கவும் உணவே அவசியமாகிறது. இந்த உணவினைத் தொல்காப்பியர்,

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**

**(தொல்,அகத்,20)**

எனக் கருப்பொருளில் வைத்துப் பாடுகிறார். பண்டைய தமிழகத்தில் ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் இயற்கையான உணவினை உண்டு நலமாக வாழ்ந்தார்கள். இன்றைய மக்கள் மருந்தின் மீது கொண்டுள்ள அக்கறையே அதிகமாக உள்ளது. எத்தகைய மருந்தினை உட்கொண்டாலும் அதற்கு முன் ஒருபிடி சோற்றை உட்கொண்டே ஆகவேண்டும். உயிர்வாழ இன்றியமையாத உணவு குறித்தும் இன்றைய மருந்துலகம் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம் எனலாம்.

**இன்றைய மருந்துலகமும் - ஆருயிர் மருந்தும்**

இன்றைய உலகம் மருந்துலகமாகவே மாறியிருக்கின்றது. இன்றைய இயந்திர உலகில் வேலைப்பழுவின் காரணமாக நேரத்திற்கு உணவு அருந்தாமையாலும், முறையான உணவினை உட்கொள்ளாமையாலும் உடலுக்கு ஒவ்வாத பண்டங்களை எடுத்துக் கொள்வதாலும் பலவித உபாதைகளுக்கு ஆளாகின்றனர். தங்கள் பொருளாதாரத்தைச் சத்தான உணவிற்கு செலவழிப்பதை விட மருந்திற்கும் மருத்துவத்திற்குமாகவே அதிகம் செலவிடுகின்றனர். வயிற்றுப் பசியைத் தணிவிக்கும் 'சோறு' என்பது பலரும் அறிந்த சொல், பயின்ற சொல். பலமுறை பயின்றமையால் அதன் அருமையை அவசியத்தை இழந்து விட்டோம். வயிற்றுக்குச் சோறு நேரத்துக்குச் சோறு என்று நினைக்க மறந்துவிட்டோம். மக்களின் மனப்பாங்கு மருந்துண்பதிலேயே அமைகிறது. மருந்தின் மீது காட்டும் அக்கறையைக் கூட சோற்றின் மீது காட்ட மறுக்கின்றனர். வாய்க்குச் சோறாயினும், வயிற்றுக்குச் சோறாயினும் எந்த மருந்தினை உட்கொண்டாலும் 'ஆருயிர் மருந்து' என்று போற்றப்படும் உணவு இல்லையென்றால் உயிர் வாழ இயலாது. 'ஆருயிர் மருந்து' என்ற சொல்லாட்சியால் மக்கள் உள்ளத்தில் சோற்றின் இன்றியமையாமையைப் பதிய வைப்பதை,

**"ஆங்கதிர் பெய்த ஆருயிர் மருந்து" - மணிமேகலை: கா:11:48**

**"அகன்சுரைப் பெய்த ஆருயிர் மருந்து" - மணிமேகலை:கா:11:117**

**"ஆருயிர் மருந்தாம் அமுதசுரபி" - மணிமேகலை:கா:12:114**

**"ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து" - மணிமேகலை:கா:16:135**

**"அருந்தியோர்க் கெல்லாம் ஆருயிர் மருந்தாய்" -மணிமேகலை:கா:28:228**

போன்ற அடிகள் தெளிவுபடுத்துகின்றன.


---

தமிழ்த்துறைத் தலைவர், பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.



Scanned with CamScanner

KAAVYA TAMIL (QUARTERLY) July - Sep., 2015
Regd. No. TNTAM2012/43610



இந்திய இலக்கியத்தில் தமிழின் உச்சம்

# வைரமுத்து சிறுகதைகள்

வெளியீட்டு விழா

அக்டோபர் 10
மாலை 6 மணி

காமராசர் அரங்கம்
சென்னை



## கலைஞர்
## கமல்ஹாசன்
## வைரமுத்து

ஒரே மேடையில்



### வைரமுத்து சிறுகதைகள்

- 40 வாரங்கள் ஒரே படைப்பாளியால் இடைவெளியின்றி எழுதப்பட்ட கதைகள் என்ற முதல் பெருமை பெறுகிறது
- களம் புதிது - கதை புதிது - மொழி புதிது என்ற படைப்புக்கொள்கையால் ஒரு நூற்றாண்டுத் தமிழ்ச்சிறுகதைகளில் தனித்தடம் பதிக்கிறது.
- வெளிவந்து கொண்டிருக்கும்போதே தன்னாட்சிக் கல்லூரிகளில் பாடங்களாகும் பாங்கு பெற்றது.
- வட்டாரத்தன்மை தேசியத்தன்மை உலகத்தன்மை என்ற முப்பரிமாணம் கொண்டது.
- மனிதகுலத்தின் அறுந்துபோன நம்பிக்கைகளின் கடைசி இழைகள் திரட்டித் திரட்டித் தேர்வடம் செய்கிறது.
- சென்றுதேய்ந்து இற்றுப்போன சிறுகதைவாசிப்பைத் தமிழ்ச் சமுதாயத்தில் மீட்டெடுத்திருக்கிறது.

அன்போடு அழைக்கிறது
வெற்றித் தமிழர் பேரவை

KAAVYA TAMIL ISSN 2277 - 9221

Scanned with CamScanner